LIBRARY
28 APR 1965
STATE LEGISLATURE, MA

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 22nd January 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. Sri S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Pre-University Course

* 55 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of seats sanctioned for admission to the P.U.C. in each of the colleges in Tiruchirappalli for the year 1964–65; and

(*b*) whether there is any reduction in the number of seats and if so, the reasons for the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The number of seats sanctioned by the University of Madras for the Pre-University Course in colleges in Tiruchirappalli are as follows:—

Colleges.	*Number of seats sanctioned.*
Jamal Mohamed College, Tiruchirappalli ...	595
National College, Tiruchirappalli	595
St. Joseph's College, Tiruchirappalli	595
Holy Cross College, Tiruchirappalli	425
Seethalakshmi Ramaswami College, Tiruchirappalli	480
Rajah's College, Pudukkottai	320

(*b*) No.

* 56. *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the total number of Colleges in the State,

(*b*) the total number of seats in the P.U.C. for the year 1963–64; and

(*c*) whether the Government propose to suggest any policy for the consideration of the University, regarding method of admitting students for the P.U.C.?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*): In 1963–64, there were 66 colleges having Pre-University Courses with a total number of 26,126 seats. The number of Pre-University Course Colleges this year is 76 and the seats 32,173.

(*c*) No.

[22nd January 1965

திரு. மீ. கலியாணசுந்தரம் : எழுபத்து ஆறு கல்லூரிகளிலே இந்தப் புகுமுக வகுப்புகளுக்கு ஏற்பாடுகள் இருந்தும்கூட, மாண வர்கள் கல்லூரிகளிலே இடம் பெறுவதிலே கஷ்டம் இருக்கிறது. அதுவும் அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் படித்துவிட்டு கல்லூரி களுக்கு வருகிற சமயத்தில், மதத்தின் அடிப்படையில், ஜாதியின் அடிப்படையில் சில கல்லூரிகளில் பிராமணர்களாக இருந்தால் இடம், சில கல்லூரிகளில் முஸ்லீம்களாக இருந்தால் இடம், சில கல்லூரிகளில் கிருஸ்தவர்களாக இருந்தால் இடம் என்ற நிலை இருப் பதனால், வகுப்பு, ஜாதி உணர்ச்சிகளுக்கு இடம் அளிக்காமல், மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை அவர்களுக்கு விடாமல் அரசாங்கமே ராஜ்யம் பூராவுக்கும் ஒரு கமிட்டியை நியமித்து அவர்களைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி யோசனை அரசாங் கத்தினிடம் இல்லை. அம்மாதிரிச் செய்வது சாத்தியமா என்றும் அரசாங்கத்துக்கு தோன்றவில்லை. இந்த ஆண்டிலே தனிப்பட்ட வர்கள் கல்லூரிகள் 6, சர்க்கார் கல்லூரிகள் 4, ஆக 10 கல்லூரிகள் புதிதாக அமைக்கப்பட்டன. வருகிற ஆண்டிலும் கல்லூரிகள் புதிதாக அமைக்கப்படும். திருச்சியிலும் ஒரு சர்க்கார் கல்லூரி புதிதாக அமைக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தப் புகுமுக வகுப்புகளிலே சுமார் 32,000 இடங்கள் இருப்பதாக கனம் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற வருடத்திலே எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் சுமார் 70,000-பேருக்கு மேல் பாஸ் செய்தார்கள். அக்டோபர் பரீட்சையிலும் சுமார் 20,000 பேருக்கு மேல் பாஸ் செய்திருக்கிறார்கள். ஏறக்குறைய ஒரு லட்சம் பேர் இந்த வகுப்புக்கு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த வருடத்திலும் சுமார் ஒரு லட்சம் பேர் பாஸ் செய்வார்கள். ஏற்கெனவே அக்டோபரில் பாஸ் செய்தவர்கள் வேறு இருக் கிறார்கள். 32,000 பேர்களுக்கு இடம் இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும், வேறு பாலிடெக்னிக்குகளில் 20,000 பேர்கள் படிக் கிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும், மீதியுள்ள 50,000 மாண வர்களுக்கு கல்லூரிகளுக்குப் போகவோ அல்லது வேறு வேலை வாய்ப்பு இல்லாமலோ இருக்க வேண்டிய நெருக்கடி ஏற்படுகிற காரணத்தினால், ஷிப்ட் முறையைக் கொண்டுவர கல்லூரி அதிகாரி களும், பல்கலைக்கழகமும் சேர்ந்து பரிசீலனை செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்ற ஆண்டிலே புகுமுக வகுப்புகளில் 26,000க்கு மேற்பட்ட மாணவர்கள் சேர்க்கப்பட் டிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே 6,000 அதிகமாகி இருக்கிறது. ஆக 32,000. வருகிற ஆண்டிலே புதுக் கல்லூரிகள் அமைக்கப் படும் என்று கூறினேன். ஆனால் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் பண்ணு கிறவர்கள் எல்லோருக்கும் கல்லூரிகளில் இடம் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. வேறு நாடுகளிலும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம்தான் கல்லூரிகளில் சேர்க்கப்படுகிறார்கள். அமெரிக்காவை எடுத்துக்கொண்டாலும், ரஷியாவை எடுத்துக் கொண்டாலும், இங்கிலாந்தை எடுத்துக்கொண்டாலும் ஒரு நாட் டிலே 40 சதவிகிதம், ஒரு நாட்டிலே 50 சதவிகிதம், ஒரு நாட்டிலே

22nd January 1965]

60 சத விகிதம் என்ற விகிதத்தில்தான் எடுத்துக்கொள்ளுகிறார்கள் அதற்குமேல் எடுத்துக்கொள்வதில்லை. வேறு கோர்ஸ்களுக்கு அவர்கள் போகவேண்டும். நெருக்கடிக்கு மற்றொரு காரணம் எல்லோரும் ஒரே பாடம் கேட்கிறார்கள். அந்தப் பாடத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் ஓரளவுக்குத்தான் செய்ய முடிகிறது. அதனாலும் இட நெருக்கடி ஏற்படுகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த இட நெருக்கடியைத் தீர்ப்ப தற்கு இன்றைக்கு இருக்கக்கூடிய கல்லூரிகளில் 500 பேர்கள் சேர்க்கிறார்கள் என்று சொன்னால், அதை 700 அல்லது 750 ஆக அதிகரிப்பதற்கு வசதி செய்வதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யூனிவர்ஸிடியார் அப்போதைக் கப்போது இதை அனுமதிக்க வேண்டும். அவர்களும் அனுமதித் துக்கொண்டு வருகிறார்கள். கல்லூரி ஸ்தானங்கள் அதிகப்படுத் தப்பட்டு வருகின்றன. அப்படி அதிகப்படுத்தும்பொழுது அதற் கேற்றவாறு ஏற்பாடுகள் இருக்கவேண்டும். ஹாஸ்டல் வசதி இருக்க வேண்டும். கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் ஷிப்ட் முறையைப் பற்றிக் கேட்டார்கள். ஷிப்ட் ஸிஸ்டம் நடத்துவது சாத்தியமில்லை. ஏனென்றால் அதற்கு ஆசிரியர்கள் அதிகமாக வேண்டியிருக்கும். ஆசிரியர்கள் குறைவாக இருக் கிறார்கள். இரண்டாவதாக, பகல் நேரத்தில் படிக்கும்பொழுதே மாணவர்கள் தூங்குகிறார்கள். அப்படியிருக்கும்பொழுது இரவிலோ அல்லது விடியற்காலையிலோ வைத்துக்கொண்டால், அது சரியாக வராது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கல்லூரிகளில் எவ்வளவுதான் ஸ்தானங்கள் அதிகரிக்கப்பட்டாலும், ஜூலை மாதம் வந்த உடனே மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் கஷ்டம் ஏற்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் மாணவர்களைச் சேர்க்கும் முறையிலே இருக்கக்கூடிய கோளாறு. இது சம்பந்தமாக யூனிவர்சிடி கல்லூரி களுக்கு உத்தரவு அனுப்பியிருக்கிறதா ? அப்படியானால் என்ன விவரம் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யூனிவர்சிடி ஒரு யோசனை கூறியிருக்கிறது. 100-க்கு 60 என்று நினைக்கிறேன், ஸ்தலங்களி லுள்ள மாணவர்களைச் சேர்க்க வேண்டும், அதற்குப் பிறகு வெளியிலிருந்து வருகிறவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்பது. குறைந்தபட்சம் மார்க்குகள் இவ்வளவு வாங்கவேண்டும் என்றிருக்கிறது. அதையும் அதிகப்படுத்தவேண்டும் என்பது. அதிகமாக பெயிலியர்கள் இருக்கின்றன, ஆகவே தரத்தை உயர்த்த வேண்டும் என்ற யோசனை யூனிவர்சிடியில் இருக்கிறது. என்ன முடிவு செய்தார்களோ எனக்குத் தெரியாது.

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சை மாவட்டத்தில் மன்னார் குடியில் ஒரு கல்லூரி அமைக்கவேண்டுமென்று சில பெரியவர்கள் நிதி உதவி செய்ய முன்வந்திருக்கிறார்கள். நிதி வசூல் செய்து கொண்டிருக்கிறோம். அந்த வசூல் முடிந்த உடனே, இந்த வருஷத் திலேயே ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் அனுமதி தருமா ?

[22nd January 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த வருஷம் ஆரம்பிக்க வேண்டுமென்றால், சென்ற அக்டோபர் மாதமே யூனிவர்சிடிக்கு மனுப்போட்டிருக்க வேண்டும். அப்படிப் போட்டார்களா என்று எனக்குத் தெரியாது. தஞ்சையில் ஒரு பெண் கல்லூரி வைப்பதற்கு யோசனை இருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. குறிப்பிட்ட காலத்தில் யூனிவர்சிடிக்கு மனுப் போட்டிருந்தால் அது எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல்: சார், எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்த மாணவர்களுடைய ஸர்ட்டிபிகேட்டுகளில், " They are eligible for College Course " என்று இருக்கிறது. ஆனால் கல்லூரிகளில் சேருவதற்குச் சென்றால், 300 மார்க்கு வேண்டும், 290 மார்க் வேண்டும் என்று கேட்கிறார்கள், அப்படிப்பட்டவர்களைத்தான் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். அந்தக் காரணத்தினால், குறைந்த மார்க்கு வாங்குகிற பிற்பட்ட வகுப்பினர்களான மாணவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. இந்தச் சங்கடத்தை நீக்க, சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பிற்பட்ட வகுப்பினர் குறைந்த மார்க்கு வாங்குகிறார்கள் என்பது சரியில்லை; அவர்களை அப்படி அவமதிக்கக் கூடாது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களும் அதிகமான மார்க்குகள் வாங்குகிறார்கள். இவ்வளவு மார்க்கு இருக்க வேண்டும் என்று கல்லூரி நிர்வாகிகள் கேட்டால் அதில் தவறு இல்லை, அந்த உரிமை அவர்களுக்கு உண்டு. ஐந்து ஸ்தானத்திற்கு 10 பேர் மனுப்போட்டால், அவர்களை எப்படிப் பொறுக்குவது என்று கல்லூரியைச் சேர்ந்தவர்கள் நிர்ணயிக்கலாம். அப்படி அவர்கள் செய்யலாம் என்று கோர்ட்டார் கூட தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: 'ஷிப்டு' முறையைப் பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாணவர்கள் ஒரே மாதிரிப் பாடத்தைப் படிப்பதற்குக் கேட்கிறார்கள் என்றும் சொன்னார்கள். அதனால்தான் இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்றன என்றும் சொன்னார்கள். அவர்களுடைய அந்தக் கருத்தை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். மறுக்கவில்லை. ஆனால், இன்றைக்கு 50, 60 சதவிகிதத்தினருக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைகள் இருப்பதால், பிரின்சிபால், கல்வி நிபுணர்கள் இவர்களைக் கலந்து ஆலோசித்து, கலைப்பாடங்களைப் படிப்பவர்களுக்கு லாபரடரி தேவையில்லை என்ற காரணத்தினால், லாபரடரி தேவையிருந்தால்கூட, வெளிநாடுகளிலே ஆபீஸ் எல்லாம்கூட காலை எட்டு மணியிலிருந்து வேலை செய்கிறார்கள் என்பதைப் பார்த்து, இதைக் கல்விப் பிரச்சினையாக மட்டும் கருதாமல், வேலைவாய்ப்பு இல்லாமல் இருப்பதைத் தீர்க்கும் என்று, அதிகப்படியான ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்ற காரணத்தினால் அப்படி அதிகமாக இடம் கொடுக்க, அந்த முறையைக் கையாள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

22nd January 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சாதாரணமாக விஞ்ஞான பாடங்கள் படிக்கத்தான் மாணவர்கள் அதிகமாக வருகிறார்கள். கலைப்பாடங்களுக்கு வருவதில்லை. புகுமுக வகுப்பில் சேர்ந்தவர்களிலேயே 60, 70, 80 இன்னும் 90 சதவிகிதம் கூட ஃபெயில் ஆகிப் போய்விடுகிறார்கள். அது விரயம். ஆகவே எல்லோரையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று இல்லாமல், மற்றவர்களுக்கு வேறு வகையில் வழிதேட வேண்டும் என்பதுதான் நோக்கம்.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், குறைந்த மார்க்குகள் பெற்று இருந்தாலும், சிலர் செல்வாக்கு பெற்று இருப்பதால, சில கல்லூரிகளில் வசதி படைத்தவர்கள், சலுகைகள் பெற முடிகிறது, அப்படி வசதிகள் இல்லாதவர்கள் இடம் பெறமுடியவில்லை என்பதை அனுசரித்து ஒரு கமிட்டி போட்டு, யோக்கியதாம்சங்களைப் பார்த்து இடம் அளிப்பதை நிர்ணயம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படிக் கூட ஒன்று இரண்டு கல்லூரிகளில் புகார் வந்தது. கலைஞர் எம். ஜி. ராமசந்திரன் தலைவராக இருக்கும் தியாகராஜா கல்லூரியில்கூட அப்படிப் பட்ட புகார் வந்தது ; பணம் வாங்கிக் கொண்டு சேர்க்கிறார்கள் என்று ஒரு புகார் வந்தது. (திரு. இராம. அரங்கண்ணல்: யார் மீது ?) அவர்கள் வாங்கினார்கள் என்று இல்லை, வேறு யாரோ வாங்கினார்கள் என்று அவர்கள் கூட வருத்தப்பட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். அப்படிப்பட்ட விஷயங்களை யூனிவர்சிடி விசாரிக்க வேண்டும். விசாரிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அப்படி செய்யப்படுகிறது பொதுவாக தவறுதல் நடப்பதில்லை. குறிப்பாக எந்தக் கல்லூரியிலாவது தவறு நடந்தால் அது விசாரிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், தனியார் கல்லூரிகளாக இருந்தாலும், அரசாங்கத்தினிடம் இருந்து பண உதவி பெற்றுத்தான் கல்லூரிகள் நடைபெறுகின்றன. அரசாங்கம் இன்னின்ன மாணவர்களை, யூனிவர்சிடியின் யோசனைப்படி, சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம் பக்தவத்சலம் : பொதுவாக சில விதிகள் விதிக்கலாம். யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது பற்றிச் சொல்ல முடியாது. மனுக்கள் எவ்வளவு இருக்கிறதோ அவைகளிலிருந்து தேவையான மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கல்லூரிகளுக்கு இருக்கிறது. அது பற்றி கோர்ட்டுத் திர்ப்புகூட இருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சார், கனம் முதல் அமைச்சர் அவர்கள், உதகையில் பேசும்போது, நீலகிரிக்கு ஒரு பெண்கள் கல்லூரி இருப்பதற்கான காரணங்கள் இருக்கின்றன என்று சொன்னார்களே, இந்த பட்ஜெட்டிலாவது அங்கே ஒரு பெண்கள் கல்லூரியை வைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[22nd January 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏராளமாகப் பெண்கள் இப்பொழுது கல்லூரிகளில் படிக்கிறார்கள், ஆகவே அவர்களுக்குத் தனியாக ஒரு கல்லூரி இருந்தால் நல்லது என்று சொன்னேன். அதற்காக நானே, சர்க்காரே கல்லூரி வைக்க வேண்டும் என்று சொல்லுவதா ? அவர்களே முன் வரவேண்டும்; அங்குள்ளவர்கள் முன் வரவேண்டும். இப்பொழுது இருக்கும் கல்லூரிக்குக் கூட, தொகைகள் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, கடைசியில் சொற்பத் தொகையைக் கொடுத்துவிட்டு அரசாங்கம் பார்த்துக்கொள்ளும் என்று விட்டு விட்டார்கள். பெண்கள் கல்லூரி தனியாக வேண்டும் என்றால் அவர்களாகவே ஏற்பாடு செய்ய முன்வந்தால் சர்க்கார் உதவிசெய்யும்.

MR. SPEAKER : Now I am taking up Question No. 79 as the concerned Hon. Minister has to go out on urgent duty.

Motor boats for fishermen

* 79. *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether any motor boats have been given to fishermen in any of the places in the taluks of Ramanathapuram, Tiruvadanai and Mudukulathur in Ramanathapuram district; and

(*b*) if not, whether there is any proposal to allot some to those taluks?

THE HON. SRI G. BHUVARAHAN : (*a*) & (*b*) Twenty-one mechanised boats have so far been given to fishermen in Ramanathapuram taluk of Ramanathapuram district. In addition, four boats will be given to fishermen in Ramanathapuram taluk and one boat to fishermen groups of Mudukulathur taluk as soon as the boats under construction are completed. No application is pending from Tiruvadanai taluk.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் வழங்கப் படுகிறதா அல்லது எங்கள் மாவட்டத்தில் மரக்காணத்தில் இருந்து கோட்டக்குப்பம் வரை இருக்கும் மீனவர்களுக்கும் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : மாநிலத்தில் கடல் ஓரப்பகுதியில் இருக்கும் எல்லா இடங்களிலும், எந்த மாவட்டமாக இருந்தாலும் கொடுக்கப்படும். மரக்காணத்திலிருந்து யாராவது மனுப்போட்டால், அது பரிசீலனை செய்யப்படும்.

திரு. ஏ. ஆறுமுகம் : சார், கடலோரப் பகுதியில்லாத மற்றப் பகுதிகளில் இருக்கும் மீனவர்களுக்கும் உதவி செய்யத் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினருடைய ஊர் குளத்தில் போட் ஓடுகிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : படகு கொடுக்கத் திட்டம் இல்லை.